**கிரிபாவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 22 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிரிபாவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டிய ரூபா 1,858,174 பெறுமதியான கணனி, துணைப் பாகங்கள், வளிப்பதனாக்கி இயந்திரம் என்பவற்றை உள்ளடக்கிய 61 விடயங்கள் தளபாடம் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 75,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கொங்கிறீட் கதிரைத் தொகுதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 73,189 தொகையான கடன்கொடுத்தோர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 161,109,946 தொகையான உரித்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 13 இல் ரூபா 161,421,485 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) பல்வேறு நிறுவனங்களிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த தளபாடம் மற்றும் உபகரணங்களில் 44 விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களின் மீதிக்கும் உரிய பட்டோலைகளின் மீதிக்கும் இடையே ரூபா 2,066,293 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் ரூபா 91,500 தொகையான முற்கொடுப்பனவுகள் வைப்புப் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 101,500 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 429,739 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 13,815,206 கூட்டுத்தொகையான பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

ஏதாவதொரு காலத்திற்காக வைக்கப்பட வேண்டிய வைப்புக்கள் தவிர செலுத்த வேண்டிய ஏனைய பொறுப்புக்களை செலுத்தி விடுவிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்துடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 371 (2) ஆ | செயல்நிமித்த உப கட்டுநிதி தேவையை விஞ்சி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371 (2) இ | 18 சந்தர்ப்பங்களின் போது முற்பணமாக பெறப்பட்ட ரூபா 188,000 தொகைகளைத் தீர்ப்பதற்கு 14 நாட்கள் முதல் 125 நாட்கள் வரை தாமதப்படுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 86,050 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,379 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 23,671 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 23,671 அதிகரிப்பிற்காக மீண்டெழும் செலவினங்களின் குறைவடைந்தமை காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 ஆதன வரி

பிரதேச சபை எல்லையில் காலரீதியில் புதிய அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் இனங்காணப்பட்டு குறிப்பிடப்பட்ட பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரித்து ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 07 வியாபார நிலையங்களில் 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சில் நிலுவையாகக் காணப்படுகின்ற ரூபா 360,419 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 கடைகளில் இருந்து மீளாய்வாண்டிற்குரிய ரூபா 68,750 தொகையான வாடகை உரிய பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடகைக்கு வழங்கக்கூடிய 14 சொத்துக்கள் மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு வழங்குவதற்கு முடியாமையினால் ஆகக் குறைந்தது ரூபா 294,297 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

#### 2.3.3 அனுமதிப் பத்திரக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் சபை அதிகாரப்பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 04 தொலைபேசிக் கோபுரங்களின் செயன்முறைக் கட்டணம் மற்றும் இணக்கச் சான்றிதழ் விநியோகித்தல் தொடர்பாக ஆகக் குறைந்த கட்டணமாக ரூபா 1,140,000 தொகையை உரிய நிறுவனங்களிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு சமிஞ்சை கோபுரத்தைப் பயன்படுத்தி பல்வேறு கம்பனிகள் பாவனையாளருக்கு சேவைகளை வழங்குகின்றமை அவதானிக்கப்பட்ட போதிலும், சபை வருடாந்தம் வியாபார அனுமதிப் பத்திர வருமானத்தை அறவிடும் போது இது தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி மற்றும் கட்டிடம் பதிவேட்டின் பிரகாரம் 17 காணிக் கூறுகளுக்காக சட்டரீதியான உரித்துறுதியைத் தயாரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெகோ லோடர் மற்றும் NW VC 9914 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் என்பவற்றை சபையின் பெயரில் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் காசேட்டு மீதி ரூபா 962,046 இனால் விஞ்சி காசோலை வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 19,080,506 செலவில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட பெறகும்புற மற்றும் கிரிபாவ பேரூந்து நிலையங்களிலுள்ள 07 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறமின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 2,000,377 செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த கிரிபாவ தமுத்த பூங்கா சரியான பிரகாரம் பராமரிக்கப்படாமலும், பயன்படுத்தப்படாமலும் காணப்படுகின்றமை 2017 மார்ச் 14 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) சிறுவர் பூங்கா மற்றும் சந்தை வளவு என்பன சரியாக பராமரிக்கப்படாமல் காணப்பட்டமையின் காரணமாக இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டு அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

800 கலன் கொள்ளளவுடைய தண்ணீர் பவுசர் ஒன்று 1 ½ வருட காலமாக அலுவலக வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பஹல கிரிபாவ மற்றும் தமுத்த நூலகங்களிலிருந்து வெளி வாசகர்களுக்கு விநியோகிக்கப்பட்டு 1 – 6 வருடங்களுக்கிடையிலான காலமாக மீண்டும் கையளிக்கப்படாத 86 புத்தகங்களின் பெறுமதி ரூபா 17,681 ஆகும்.

(ஆ) சேவையிலிருந்து விலக்கிய, பணியிட மாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து 03 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரையிலான காலவீச்சில் அறவிட வேண்டியிருந்த கடன் மற்றும் முற்பணத் தொகை ரூபா 165,100 ஆகும்.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,514,145 செலவில் பஹல கிரிபாவ, கம்பொல, தம்சோபுற மற்றும் இஹல கிரிபாவ போன்ற மயான நிலங்களைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலிகளுக்குரிய கொங்கிறீட் கம்பித் தூண்கள் உரிய நியமத்தில் காணப்படாமையின் காரணமாக சில தூண்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் உடைந்து காணப்பட்டன.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,628,658 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹஸ்த்திகுச்சி வாகனத் தரிப்பிடத்திற்குரிய மலசலகூட முறைமையின் முன்பக்க கூரை ஓரம், மோட்டுக் கூரை, முன்பக்க கதவு மற்றும் கதவு பூட்டுக்களை இடல் மற்றும் நிலத்திற்கு தரை ஓடுகள் பதித்தல் என்பன மீளாய்வாண்டு வரையிலும் உரிய பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பெறகும்புற வாராந்த சந்தைக் கட்டிடத்தின் உட்பகுதியில் சீமெந்துக் கட்டு 40.3 மீற்றர் x 9.6 மீற்றர் பகுதியொன்று வெடித்து மேற்பகுதி சேதமடைந்து காணப்பட்டது.

(ஈ) சங்கபோபுற நெல் களஞ்சியத்திற்கு அருகில் போகஸ் சந்தியிலிருந்து நபரொருவரின் வீடு வரை வீதியில் மதகுகள் இட்டு மீள்புனரமைப்பின் போது ரூபா 494,473 செலவில் கிரவல் பரவுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், வீதியின் மிக முக்கிய அங்கமான உடைந்த மதகு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 352,491 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் இராஜங்கனை 04/02 பகுதி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் உள்ள மரம் செடிகளை பிடுங்கி அகற்றி நிலத்தை சமப்படுத்துதல் மற்றும் கிரவலை வழங்கி கோவையிடலுக்கான மதிப்பீட்டு தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், விளையாட்டு மைதானத்தினர் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமையால் விளையாட்டு மைதானத்தின் பிள்ளைகளின் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த சங்கப்பால தெலவில்ல நிர்மாணிக்கும் வேலையின் வேலை விடயம் 04 இன் பிரகாரம் ரூபா 217,373 செலவில் தெலவில்ல மேற்பரப்பில் போடப்பட்டிருந்த கொங்கிறீட் தட்டு நடுப்பகுதி குறுக்குப் பக்கமாக வெடித்திருந்தமை 2017 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(எ) மடிகே கிராம உத்தியோகத்தர் பிரிவில் வல்பாலூவ மொலேவ வரையான வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் போது வேலை விடய இலக்கம் 03 இன் கீழ் மண் வெட்டுவதற்கு ரூபா 25,429 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், காணி உரிமையாளர்களிடமிருந்து மண் இலவசமாகப் பெறப்பட்டிருந்ததாகவும் வேலை விடய இலக்கம் 04 இன் பிரகாரம் கிரவல் வழங்கி கோவையிடல் மேற்கொள்வதற்கு ரூபா 284,698 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், கிரவலுக்காக மாத்திரம் ரூபா 22,000 செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டமையால் ரூபா 288,127 தொகையொன்று பயன்படுத்தப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

**3.6 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 ஏக்கர் காணியைச் சுற்றி வேலியொன்று நிர்மாணித்தல், வாயிற்கதவைப் பொருத்துதல் மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலைய நிலமாக அறிவித்தல் பதாதையொன்றைப் பொருத்துவதற்காக முன்னைய ஆண்டில் ரூபா 442,758 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையிலும் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது செயலமர்வொன்றை நடாத்துவதற்கும், கழிவுப்பொருள் பாத்திரங்களை வழங்குவதற்கும் மற்றும் கழிவுப்பொருள் சேகரிக்கின்ற உழவு இயந்திர பராமரிப்பாக ரூபா 192,505 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் தமது அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படாமையினால் வியாபார சமூகம் மற்றும் நகர மக்களுக்கு அண்மித்துக் காணப்பட்ட வெற்றுக் காணிகளிலும், வீதியின் அருகிலும் முறையற்ற வகையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டிருந்தது.

**3.7 சுற்றாடல் பிரச்சினைகள்**

தமுத்த பூங்கா, கிரிபாவ கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம், வறாவெவ வாராந்த சந்தை வளவு, பஹல கிரிபாவ வாரச் சந்தை வளவு, பெறகும்புற வாராந்த சந்தை வளவு, பெறகும்பற வாராந்த சந்தை வளவில் மலசலகூட முறைமை மற்றும் ஹத்திகுச்சி வாகனத் தரிப்பிட மலசலகூட முறைமை என்பன 2017 மார்ச் 14 ஆந் திகதிய பௌதீக பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் காடு வளர்ந்து அசுத்தமாகக் காணப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

05 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,858,000 தொகையான பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | i. வருடாந்தம் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்காமை |
| | ii. பதிவேடுகளுக்கும் பட்டோலைகளுக்குமிடையே இணங்காமைகள், பதிவேடுகள் பேணப்படாமை, காசேடு நாளாந்தம் சமப்படுத்தப்படாமை மற்றும் காசேட்டில் செலவு மீதி ஏற்படும் வகையில் காசோலை வரைந்தமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | வருமான நிர்வாகம் | புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாமை, வருடாந்தம் வாடகைக்கு வழங்க வேண்டிய ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | நிலையாக சொத்துக் கட்டுப்பாடு | சொத்துக்களின் பாதுகாப்பு, சொத்துக்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை மற்றும் விளைவற்ற, குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | செயற்திட்டங்களை அமுல்படுத்தல் | பொது மக்களின் தேவையின் அடிப்படையில் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை, மதிப்பீடுகளில் மாற்றங்கள் திருத்தப்படாது செயற்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் நிதிஏற்பாடு காணப்படும் போது அதற்கு குறைந்த கேள்விக்கு செயற்திட்டங்களை வழங்கி இடையில் நிறுத்தப்பட்டிருந்தமை. |
| (உ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | சபையினால் நாளாந்தம் கழிவுப்பொருட்கள் சேகரிக்காத நிலமையில் சுற்றாடல் பிரச்சினைகள் தோன்றியிருந்தமை. |